யாழ்

தென்பகுதிக்கு அரசவாகனங்களில் ஆயுதகடத்தல்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 9 இதழ் 40
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-3-1994

சிறிமா குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாக்குச் சீட்டுக்கள் நிரம்பிய வீடமைப்பு அமைச்சுக்கு சொந்தமான பல வாகனங்கள் நேற்று முன்தினம் கொழும்பு மாளிகாவத்தையிலிருந்து தென்பகுதிக்குப் புறப்பட்டுள்ளதாகவும், ஆயுதங்கள் நிரம்பிய மற்றுமொரு வாகனத் தொகுதி எம்பிலிப்பிட்டியிலிருந்து தென்பகுதிக்கு புறப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமான ஆதாரபூர்வமான தகவல்கள் தன்னிடமுண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. ஆதரவாளர்

எதிரணி கூட்டங்களில் குழப்பம் விளைவிக்க முயற்சி

(கொழும்பு)

நீலநிற சேட்டுக்களையும் தொப்பிகளையும் அணிந்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் பொதுசன ஐக்கிய முன்னணியின் கூட்டங்களுக்கு வந்து குழப்பம் விளைவிக்க முயல்வதாக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரமுகர்களைக் கைதுசெய்து அதன் மூலம் முன்னணியின் ஆதர

(4ம் பக்கம் பார்க்க)

றெக்கற், சிறுபீரங்கிகள் மூலம்

ஆனையிறவில் புலிகள் தாக்கு

மூன்று படையினர் உயிரிழப்பு

இரு சிப்பாய்கள் காயம்

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவ முகாம்மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். அதிகாலை 4-30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் இராணுவத்தரப்பில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். இரு சிப்பாய்கள் காயமடைந்தனர், கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் இத்தாக்குதல் பற்றிய விபரங்களைத் தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

தெற்கில் பொதுசன முன்னணி கொலைப் படையுடன் மோதல்!

துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயம்!!

(கொழும்பு)

சூரியவெவ பகுதியிலுள்ள பொதுசன ஐக்கிய முன்னணியின் அலுவலகத்துக்குள் நேற்று முன்தினம் இரவு உட்புகுந்த கொலைப்படையினர் ஒன்றுடன் ஏற்பட்ட மோதலில் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சப்பிரகமுவ மாகாண சபையின் சுகாதார அமைச்சர் நிமல் பியரத்ன உட்பட மற்றும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொலை செய்வதற்கு முயற்சி செய்தனர் என்ற

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தலில் அரசு தோல்வியுற்றால்

ஐ.தே.க. ஆட்டம்காணும் - பி.பி.ஸி. கணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 24-ம் திகதி தென்மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் அரசு தோல்வி அடைந்தால் ஐ.தே கட்சிக்கு இது ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதேநேரத்தில் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இத்தேர்தலில் தோல்வி அடைந்தால் இக்கட்சிக்கு அது ஒரு கடைசி அத்தியாயமாகவே இருக்கும்.

இவ்வாறு பி. பி. ஸி. அதன் கண்ணோட்டத்தில் நேற்று தெரிவித்தது. தென் மாகாணத் தேர்தல் பற்றி பி. பி.ஸி. மேலும் கருத்துத்

(4-ம் பக்கம் பார்க்க)

திருமலையில் இரு தமிழர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருமலை மாவட்டம் பச்சைநூர் பகுதியில், அப்பாவித் தமிழர் இருவர் படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 13ம் திகதி இரவி

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவிலிருந்து

123 இல. தமிழ் அகதிகள் 25ம் திகதி யாழ். வருவர்

(திருநெல்வேலி)

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளின் ஒரு தொகுதியினர் எதிர்வரும் 25-ம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையை வந்தடைய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் யாழ்ப்பாணத்

(4-ம்பக்கம் பார்க்க)

இளாலி பகுதியில்

ஹெலி கலிபர் தாக்கு

(எழுதுமட்டுவாள்)

நேற்று அதிகாலை 5-30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று அல்லிப்பழை இளாலி கடல் கரையை பல தடவை வட்டமிட்டு 50 கலிபர் தாக்குதலை மும்முறை நடாத்தியது.

இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் ஹெலிகொப்டரை நோக்கிப் பதில் தாக்

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கு போல்

மலையகமும் சிங்களவருக்கு இல்லாமல் போய்விடும்

- ஹரிச்சந்திர விஜயதுங்கா

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசம் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கு இல்லாமல் போய்விட்டது. மலையகமும் சிங்கள மக்களுக்கு இல்லாமல் போய்விடுமோ என எண்ணத் தோன்றுகிறது என்று சிங்கள இனவாத அமைப்பின்

(4-ம் பக்கம் பார்க்க)

கெயர் பிரதிநிதிகள் இன்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

அகில உலக கெயர் நிறுவனப் பிரதிநிதிகள் இருவர் இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளனர்.

அவசர புனர்வாழ்வு விவகார சர்வதேசப் பணிப்பாளர் திருமதி கிறிஸ்தினா பாட்சன் இலிநொய்ஸ் மாவட்ட பிர

(4-ம் பக்கம் பார்க்க)

இளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை, இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

பலாலியிலிருந்து ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை வலி-வடக்குப் பகுதியை நோக்

(4-ம் பக்கம் பார்க்க)

சந்திரிகாவை கொலை செய்ய திட்டம் தயாரிக்கப்பட்டது!

- சுதந்திரக் கட்சி எம். பி. தகவல் -

(கொழும்பு)

மேல்மாகாண சபை முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவை கொலை செய்வதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருந்ததாக ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று பொலிஸ் மா அதிபர் பிரேம் டி சில்வாவுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 18-ம் திகதி தென் பகுதியிலுள்ள பெலியத்த

(4ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

நல்ல இன தென்னை

நல்ல இன தென்னம் பிள்ளைகள் விற்பனைக்குண்டு; மில்க்வைற். (ஏ-3918)

வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை சாவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, விந்துக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி வி. இராசரத்தினம் 181, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். (இ-863)

பழைய புதிய மணிக்கூட்டு உதிரிப்பாகங்கள்

எந்தவித பழைய, புதிய மேசை, சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் (ஆண்கள், பெண்கள்) ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள் போதியளவு எம்மிடம் கையிருப்பில் உள்ளதால் உங்கள் சகல மணிக்கூடுகள், றேடியோக்களை எம்மிடம் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ளலாம். புஷ்பா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை:- கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3906)

மீனவர் நிவாரணம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் சகல கிளைகள் மூலம் கடந்த 17-ந் திகதி வியாழக்கிழமை காலை தொடக்கம் மீனவர் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

மீனவர் நிவாரணம் பெறும் சகலரும் தத்தமது சங்கக் கிளைகளில் நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. —154

மரக்கறி - முட்டை விலை வீழ்ச்சி

(அல்லாலை)

யாழ். மாவட்டத்தில் மரக்கறி வகைகள் உற்பத்தி இம்முறை அதிகரித்தபடியாலும் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதியில்லாததாலும் மரக்கறி வகைகளின் விலைவீழ்ச்சி அடைந்துள்ளது; கிலோ 40 ரூபா வரை விற்ற மரக்கறி வகைகள் கிலோ 18 ரூபா 15 ரூபா வரை விற்கப்படுகின்றது. வெங்காயப்பூ, கீரை கட்டுகள் 2 ரூபாவாக விற்கப்படுகின்றன. முட்டை 6 ரூபாவாக விற்கப்படுகின்றன. (59)

கவிதைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் நிலா தமிழின் தாசன் எழுதிய "புலர்வு" கவிதைநூல் வெளியீடு நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நா. இன்பன் தலைமையில் நடைபெறவுள்ளது. முதற்பிரதியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் வழங்க, கலை மேம்பாட்டுத் தலைவர் திரு. வெ. இளங்குமரன் பெறுகின்றார். கவிஞர் இ. முருகையன், வே. பாலகுமாரன். பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் மதிப்புரைகளை வழங்குவர். —மகி

வழிப்பறி, கொள்ளை தமிழகத்தில் அதிகரிப்பு

(சென்னை

தமிழகத்தில் வழிப்பறிக் கொள்ளைகள் அதிகரித்து வருவதாகவும் மாநில அரசு தகுந்த நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு முற்றாகவே சீர்குலைந்துவிட்டதாகவும், அண்மைக் காலமாக வழிப்பறிக் கொள்ளைகளும், திருட்டுச் சம்பவங்களும் பகல் வேளைகளிலேயே நடைபெற்று வருவதாகவும் இதுவரை எந்த குற்றவாளிகளாவது பிடிபட்டதாக இல்லை எனவும் திரு. கருணாநிதி கூறினார். —உ-வி

வெறிச்சோடி கிடக்கும் அனலைதீவு ஆஸ்பத்திரி

(பண்டத்தரிப்பு)

அனலைதீவிலுள்ள அரசாங்க வைத்தியசாலை கடந்த பல மாதமாக வைத்திய அதிகாரி எவரும் இன்றி வெறிச்சோடிய நிலையில் இருந்து வருகின்றது. மருத்துவமாது ஒருவரே பிரசவத்திற்கு வரும் கர்ப்பிணித் தாய்மாரை கவனித்து வருகின்றார்.

சுற்றியக்கூறு தரத்திலான இந்த வைத்தியசாலையின் அவல நிலையினால் இத்தீவிலுள்ள மக்கள் மருந்து சிகிச்சை பெறமுடியாது திண்டாடுகின்றனர்.

இங்கு தேங்காய் ஒன்று நான்கு ரூபாவும், முட்டை ஒன்று மூன்றுரூபாவாகவும் விற்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 72-பி

வாரத்தில் இருநாட்கள்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் மணிமேகலை சன சமூக நிலைய கட்டடத்தில் ஒருநாள் மட்டும் இயங்கி வந்த வலி தென்மேற்கு பிரதேச சபையின் இலவச சித்த ஆயுள்வேத வைத்திய நிலையம் தற்போது திங்கள், வெள்ளி கிழமைகளில் வாரத்தில் இரு நாட்கள் செயற்பட்டு வருகின்றது. (72)

உலகில் அதி சிறந்த தேசியவாதி 'டி. பி'

(கொழும்பு)

உலகிலுள்ள அதி சிறந்த தேசியவாதி தானே என ஜனாதிபதி டி. பி விஜேதுங்க பெருமைப்பட்டுள்ளார்!

பல ஆயிரம் ஏக்கர் தேயிலை, றப்பர் காணிகளை நன்கொடையாக வழங்கியுள்ளேன் நானும் அரும் பெரும் தியாகங்களை செய்துள்ளேன். என்னைப் பொறுத்தவரை உலகிலுள்ள அதி சிறந்ததேசியவாதி நானே எனவும் திரு. விஜேதுங்க தெற்கில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

பலம் வாய்ந்த ஒரு அரசினால்தான் வடக்கு - கிழக்கு பிரச்சினையை தீர்த்துவைக்க முடியும். இலங்கையில் சிங்களவர் பெரும்பான்மையினர் என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமெனவும் கூறினார். -சி

துணைவேந்தருக்கு இன்று பிரிவுபசார விழா

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 6 வருடங்களாக துணைவேந்தராக கடமையாற்றி மார்ச் 31ந் திகதியுடன் விலகிச்செல்லும் பேராசிரியர் அ. துரைராசாவுக்கு பிரிவுபசாரவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக அனைத்து உத்தியோகத்தர், ஊழியர்கள் ஒன்றிணைந்து நடாத்தும் இம்மாபெரும் பிரிவுபசார விழா தொழில்நுட்பவியலாளர் திரு. எ. கருணானந்தராஜா தலைமையில் நடைபெறும்.

பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனையின் பின் துணைவேந்தர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார் கைலாசபதி கலையரங்கில் கூட்டமும் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (154)

பொதுப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரச நிர்வாக சேவை, [illegible] சேவை கணக்காளர் சேவை மற்றும் ஏனைய அரச சேவைகளைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழிப் பரீட்சையும் 28-5-94 இல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வோர் இதற்கான மேலதிக விபரங்களை 24-2-94 தேதிக்கான அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் IIIம் தரத்திலான வேலைத்தள தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 25 ம் திகதிக்கு முன்னதாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாண அரசின் கீழ் பண்டசாலைக் காப்பாளர் பதவி தரம் II அ வகுப்பில் உள்ளவர்கள் தரம் Iற்கான தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வோர் தமது திணைக்களத் தலைவர்களூடாக தமது விண்ணப்பத்தை எதிர்வரும் 25 ம் திகதிக்குமுன்னதாகச் சமர்ப்பிக்கவேண்டும்.

மேற்படி 3 பதவிகளுக்குமான மேலதிக விபரங்களை 24-2 94 அரச வர்த்தமானியை யாழ் செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் பணிமனையில் பார்வையிடலாம். -162

செயற்பாட்டு குழு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினாலும் நீண்டகால பராமரிப்பு இல்லாததாலும் வெள்ள அழிவு போன்ற இயற்கைப் பாதிப்புக்களாலும் ஏற்பட்ட உடனடியான அழிவுகளை மதிப்பீடுசெய்து உடனடி நீண்டகால புனரமைப்பு வேலைகளுக்கு ஏற்றவகையில் திட்டங்களை மேற்கொள்ளவென செயற்பாட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினரால் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே இச் செயற்பாட்டுக் குழுவானது தெரிவுசெய்யப்பட்டது.

பேராசிரியர் வே. நவரத்தினராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

பூட்டிய சைக்கிள் திருட்டு

(அரியாலை)

அரியாலையில் ப. ஆரோணம் என்பவரின் பூட்டியிருந்த சைக்கிள் திருட்டு போயுள்ளது. கடந்த 8ந் திகதி மதுரநாயகம் என்பவருடைய புதியசைக்கிள் யாழ். தொடர் மாடிக்கட்டிட முன்றலில் பூட்டிய நிலையில் திருட்டு போயுள்ளது. (59)

துணைவேந்தர் — பேராசிரியர்

அ. துரைராசா அவர்களின்

சேவை நலம் பாராட்டு

யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக பதவியில் இருந்த காலத்தில் அவரது காரியாலய ஊழியனாகப் பணி புரிந்ததையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அவரது செயற்பாடுகள் அவரை ஒரு மனிதத் தெய்வமாக என்னை மதிக்கச்செய்தது.

தனது பதவிக்காலத்தில் எல்லோராலும் புகழப்பட்டமைபோல் பதவி முடிவின்போதும் பலராலும் பாராட்டப்படுவதற்கு அவரது வாழ்க்கைத்துணைவியாரின் ஒத்துழைப்பே காரணமாகும்.

சிறந்த பல்கலைக்கழகத்தின் தொடர் பதவியினை சிறப்புடன் மேற்கொள்ள எல்லாம்வல்ல கண்ணபிரானை பிரார்த்திக்கிறேன்.

அலுவலக ஊழியன்
இ. துரைராஜசிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்.

(சி-897)

சுழிபுரம் — பறுளாய்

முருகன் தேவஸ்தானத்தில்.....

அதிசயம்!

ஆனால் அற்புதம்!!

மெய்யடியார்களே!

கடந்த 17-3-1994 அன்று தமிழ்மக்களின் துன்பங்களை நீக்கி அபிலாசைகளை நிறைவேற்றிட கந்தன் அருள்வேண்டி விடிவிளக்குகள் 108ஏற்றிவைக்கப்பட்டதை யாவரும் அறிவர். இதன் பலாபலனாக இங்கு ஓர் அற்புதம் நடந்துவிட்டது.

★ மக்களுக்காக வேண்டிப் பிரார்த்தனை செய்ததால் நடந்ததை மக்களுக்கு அறிவிப்பது எனது கடமை.

★ ஆறுமுகப்பெருமானுக்கு 108உம், பரிவாரத் தெய்வங்களுக்கு 17உம் மொத்தமாக 125 விடிவிளக்குகள் ஏற்றி எரிந்துகொண்டிருக்கும் வேளை

∵ தனது அருளொளி விளக்கொன்றை எங்கள் விளக்குகளுடன் வைத்துவிட்டு தர்சனத்தில் கிழவராக வந்து விளக்குகளை எண்ணிக் காட்டி மறைந்தருளினார். விடிந்ததும் விளக்குகளை எண்ணிப் பார்த்தோம்.

என்ன அதிசயம்!

என்ன அற்புதம்!!

126 விளக்குகள் இருந்தன.

அவரின் திருவருளை எப்படிக் கூறுவேன்?

★ எமது வேண்டுதலை ஏற்று எங்கள் கர்மவினையாகிய இருளைப் போக்க தனது அருளொளியாகிய அத்திருவிளக்கைத் தந்தருளினார்.

இதைவிட இன்னமும் வேண்டுமா?

'சோழியூரான்'
பிறைசூடிக்குழு,
அமைப்பாளர்.

(இ-898)

யாழ்ப்பாணம்

மணிவாக்கு

கோள் கேட்பவனும் இல்லையாயின்; கோள் சொல்பவனும் இல்லை.
- நீதிவாசகம்

நமது நோக்கு

தணியாத தாகம்!

"தண்ணீர் தண்ணீர் எங்குமுண்டு - ஆனால் தாகம் தணிக்கச் சொட்டுமில்லை!".

- இது கடற்பயணம் செய்த கோல்றிட்ஜ் என்ற ஆங்கிலக் கவிஞனின் கவலை!

கடலில் மாத்திரமல்ல, நிலத்திலும் இந்த நிலை வந்துவிடும் என்ற ஏக்கம் பிறப்பதேன்?

இன்று, தொழிற்சாலைகள் வெளியிடும் நச்சு வாயுக்கள் காற்றோடு கலக்க, பெய்யும் மழை கரைந்த அமில மழையாக மாற, நன்னீர் ஏரிகள் நச்சுநீர் ஏரிகளாக மாறுகின்றன.

தொழிற்சாலைக் கழிவுகள் நிலத்தடிக் குடிநீரைக் கெடுநீராக்குகின்றன.

எமது பகுதி நிலை என்ன? இடம் பெயர்ந்தவர்கள் பொதுக்கிணற்று நீரையே நம்பியிருக்கிறார்கள். அவை தூய்மையாகப் பேணாத காரணத்தால் வாந்திபேதி நோய் பரவிவருவது அண்மைக்காலச் சம்பவங்கள்!

19ம் நூற்றாண்டிலே, இலங்கையிலே வாந்திபேதியின் கொடூரம் மகா தர்மராஜனின் வேலைப் பளுவை அதிகரித்தது. 1878ல் கண்டியிலும், 1896ல் கொழும்பிலும் குழாய்நீர் வசதிகள் ஏற்பட்டதும் இந்த நோயின் கொடூரம் பெருமளவில் தணிந்த செய்தி தரும் போதனை என்ன?

சுத்தமான நீரைப் பேணிக் காக்காவிடின், வாந்திபேதி எம்மைச் சாவு கொள்ளும்!

அண்மையிலே, ஒரு பாடசாலைக் குடி நீர் பழுதாகி, பல மாணவர்கள் வாந்திபேதி நோயால் பாதிக்கப்பட்ட செய்தி வந்தது.

பாடசாலை கிணறுகள் பொது இடத்துக் கிணறுகள் குளோரின் பாவித்துச் சுத்தப்படுத்தல் அவசியம்.

1981—90க்கான காலப் பகுதியை ஐ. நா. சர்வதேசக் குடிநீர் வசதி பெருக்கும் பத்தாண்டாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. அதன் பயனாக, குழாய்க் கிணறுகள் அமைக்கும் வசதிகள், உதவிகள் கிடைத்தன.

நிவாரணம், புனர்வாழ்வு எனப் பிறநாட்டு உதவிகள் கிடைக்கும் போது, அவற்றில் ஒரு பகுதியை, நிரந்தரமாகவே நல்ல குடிநீர் கிடைக்கும் வசதிகளுக்குப் பயன்படுத்த வேண்டியது அவசியமல்லவா?

பொதுமக்களும் கிடைக்கும் மழை நீரைக் கடலில் கலக்கவிட்டு, பின்னர் பாலைவனமாகிறதே எனத் தலையிற் கைவைக்கலாமா?

தாகம் தணிக்குமுன், கொதித்து ஆறிய நீரா என்பதை உறுதி செய்தால் உபத்திரவமும் தணியுமல்லவா?

புலிகளை தோற்கடிக்கும் பலம் இலங்கை படைகளிடம் இல்லை

இந்திய இராணுவ தளபதி கூறுகிறார்

(புதுடில்லி) விடுதலைப் புலிகளை தோற்கடிக்கக்கூடிய பலம் இலங்கை படைகளிடம் இருப்பதாக தெரியவில்லை என இந்திய இராணுவ உயர் அதிகாரியான மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா கூறியுள்ளார்.

இந்தியாவின் 'சண்டே' ஆங்கில நாளிதழுக்கு எழுதிய கட்டுரையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலை கொண்டிருந்தபோது அதில் பணியாற்றியவராவார்.

அவர் மேலும் கூறுகையில், பாதுகாப்புச் செலவு பெருமளவு அதிகரிக்கப்பட்டு இராணுவ பலத்தை இருமடங்காக்கினாலும் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்பது சாத்தியமில்லை. இராணுவம் அண்மைக் காலமாக அடுத்தடுத்து பல தோல்விகளைச் சந்தித்துள்ளது. ஐந்து இராணுவ முகாம்களை இரண்டாவது ஈழப் போரில் இழந்துள்ளது. இரண்டாவது ஈழப்போரின் நான்காவது ஆண்டில், சிங்கள மக்கள் மத்தியில் இராணுவம் சந்தித்துள்ள படுதோல்விகளையும் ஆயுத இழப்புகளையும், இராணுவ நடவடிக்கையில் வெற்றி எதுவும் பெறாததும், இராணுவத்தைவிட்டு ஓடிய 10,000 பேரை பிடிக்க முடியாதிருப்பதையும் பார்க்கும்போது எல்லாவித செயற்பாடுகளையும் இராணுவம் இழந்துவிட்டதுபோல் தோன்றுகிறது.

கடந்த இரண்டு வருடத்தில் 5 தடவை இராணுவ கட்டமைப்பு மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. கடைசியாக இந்த மறுசீரமைப்பு பூநகரி முகாம் தகர்ப்பிற்கு ஒருமாதத்திற்கு முன்பே செய்யப்பட்டது. இத்தாக்குதல் மூலம் இலங்கை இராணுவம் ஆட்டம் கண்டுள்ளது தெரிகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார். —கி

மன்னார் — தலைமன்னாருக்கிடையில்

இராணுவ காவல் நிலைகள் பல அகற்றப்பட்டு வருகிறது

(மன்னார்) மன்னார் தீவுக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான இராணுவத்தினரின் பல சிறு காவல் நிலைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் முக்கியமான அரண்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

விடுதலைப்புலிகள் இப்பகுதியில் அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் தாக்குதல் நடவடிக்கையையடுத்தே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளையில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து தாராபுரம் பகுதியை நோக்கி இரவு வேளையில் பலத்த ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டு வருகிறது.

மன்னார் அரச செயலகத்திற்கும் எல்லைப் பகுதிகள் முட்கம்பி வேலிகள் போடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —க-சி

சுயசார்புஉற்பத்திமுயற்சிக்கு சலுகை அடிப்படையில் கடன்

தமிழர் புனர்வாழ்வு கழகம் வழங்குகிறது

(யாழ்ப்பாணம்) தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஒரு அங்கமான சுயசார்பு தொழில் முயற்சி நிதியத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலில் இடம்பெற்றது.

நிதியத்தின் வளர்ச்சி பற்றி நிதியத்தின் பொருளாளர் விபரித்து பேசுகையில் 1990ம் ஆண்டுப் பிற்பகுதியில் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. நிர்க்கதியானோரும் அகதிமுகாம்களில் இருந்து எமது மக்கள் சுயநிதியில் உழைப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற அவர்களை ஊக்குவிக்கும் நோக்கோடு கடன்கள் கொடுக்கின்றோம்.

இந்தக்கடன்கள் வட்டியில்லாக்கடனாகவும் சிறுவட்டியுடன் கூடிய கடனாகவும் வழங்கப்பட்டுவருகின்றது. யாழ்ப்பாணத்தில் 7 கிளைகள் மூலமும் வன்னிமாவட்டத்தில் 5 கிளைகள் மூலம் 93ம்ஆண்டுக்கு 11810 பேருக்கு கடன்கள் வழங்கியிருக்கின்றோம்.

53,000 ரூபாவோடு ஆரம்பிக்கப்பட்ட நிதியம் தற்பொழுது 99 லட்சத்தை மூலதனமாகக் கொண்டுள்ளது என்றார். நிதியத்தின் வளர்ச்சி பற்றி பல அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகள் கருத்துக்கள் வழங்கினார்கள். ம-கி

இராணுவ அதிகாரி பொலிஸாரால் கைது

(கொழும்பு) அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கி வைத்திருந்தஇராணுவ அதிகாரி ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரஹேன்பிட்டியில் கைதான இந்த இராணுவ அதிகாரி 'ரைபிள்' படைப்பிரிவைச் சேர்ந்தவர்; தற்போது இவர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரது கைது குறித்து இராணுவ தலைமைப்பீடத்திற்கும் பொலிஸார் அறிவித்துள்ளனராம். -கி

கருணாநிதி தலைமையிலான

தி.மு.க.வே உண்மையானதாம்

(சென்னை) தமது கட்சிதான் உண்மையான தி. மு. க. என அதன் தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மதுரையில் பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தேர்தல் கமிஷன் கேட்டிருந்த விளக்கத்திற்குத் தமது கட்சி அளித்த பதிலில் இது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். தி. மு. க.-1, தி. மு. க.-2 என்ற தமிழக சட்டப் பேரவைத் தலைவரின் ஏற்பாடு, தேர்தல் கமிஷனின் முடிவு வரும்வரை ஒரு தற்காலிக ஏற்பாடே என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை திரு. வை. கோபாலசாமி தலைமையிலான தி. மு. க. 2வது அணிக்குப் பெருமளவு ஆதரவு அதிகரித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. க-சி

அன்னை பூபதிக்கு வலி. மேற்கில் அஞ்சலி

(பண்டத்தரிப்பு) தியாகச்சுடர் அன்னை பூபதியின் 6ம் வருட நினைவை முன்னிட்டு வலிமேற்கு பிரிவில் முக்கிய சந்திகள்தோறும் அன்னை பூபதியின் திருவுருவப் படம் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டுமங்கல விளக்கு ஏற்றப்பட்டு தினமும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

வீதிகளில் பாதகைகளும், மஞ்சள்-சிவப்பு நிற கொடிகளும் கட்டப்பட்டுள்ளன. சங்கானை ப. நோ. கூ. சமாசம், சங்கானையில் செயற்படும் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம், சங்கானை தென்னை பனை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் ஆகியன உட்பட சகல நிறுவனங்களின் முன்றல்களிலும் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் அன்னை பூபதியின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகின்றது 72-கி

வளமான நாட்டில் வாழ்வினில் சிறக்க
வதிவிட வேளாண்மை செய்தலே உகந்தது

இன்று

(பண்டத்தரிப்பு) சுழிபுரம் அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவுள்ளது. (72)

0 0 0

(கொழும்புத்துறை) யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வித்தியாலய அருகாமையில் அதிபர் திருமதி பரிமளம் அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும். (154)

இராசி பலன்

22- 03 - 1994

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு பங்குனி 09)

தசமி பி. இ. 1-38 வரை புனர்பூசம் பி. ப. 4-42 வரை இராகுகாலம் மாலை 3-17முதல் 4-47 வரை சுபநேரம் காலை 10-47 முதல் 12-17 வரை சித்தயோகம்.

மேடம்: கருத்துமுரண்பாடு, மனஸ்தாபம், அஞ்ஞான வாசம்.

இடபம்: இனசன வருகை, சாதகமான மாற்றம், பொருள் லாபம்

மிதுனம்: தவறான நடவடிக்கை, வீண்விரயம், போட்டி மனப்பான்மை.

கடகம்: தொழில் சிறப்பு, கருணை உள்ளம், கலந்துரையாடல்.

சிம்மம்: காரியத்தடைகள், குழப்பநிலை, காரியதாமதம்.

கன்னி: திருமணப்பேச்சுக்கள், பிறர் உதவி, மனச்சந்தோசம்.

துலாம்: விடைப்பேச்சு, பணப்புழக்கம், அறிஞர் சந்திப்பு.

விருச்சிகம்: ஏமாற்றம், குடும்ப துன்பம், வைத்திய செலவு.

தனுசு: ஆணவப்போக்கு, மனக்கவலை, தொழில் குறைபாடு.

மகரம்: சுபகாரியம், தெய்வீகசெலவு, மாமனார் உதவி.

கும்பம்: பிறர் அறிவுரை, புதிய முயற்சி, பெண்சகாயம்

மீனம்: கடினவாக்கு, அதிகாரிகள் சினம், மனப்புலம்பல்.

— ஜோஸ்யர்.

தவக்கால நற்சிந்தனை

"கடியுண்டவன் வெண்கலப் பாம்பை உற்றுநோக்கினால், உயிர் பிழைப்பான்."

(எண்ணா: 21:9)

சிலுவையை நோக்கி சீவியம் பெறுவாய் என்பதற்கு முன் அடையாளம் வெண்கலப் பாம்பு. வெண்கலப் பாம்பு எப்படி பாம்புக் கடிக்கு நலமளித்ததோ அப்படியே சீவியம் தரும் சிலுவை நமக்குத் தரப்பட்டுள்ளது. வாழ்வளிக்கும் வள்ளலை நாம் நோக்கினால் அவர் எமக்கு நித்திய வாழ்வளிப்பார்.

-ஜோ. தா.

வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு

பாடசாலைகளின் சொத்து விபரங்களைக் கோருகிறது

(திருநெல்வேலி)

பாடசாலைகளில் உள்ள அசையும், அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.

இதேவேளையில் 1994ம் ஆண்டுக்குரிய மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகத்திற்கான கணக்கு விபரங்களும் கோரப்பட்டுள்ளன.

மாகாணக் கல்வி அமைச்சினால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள கல்விச் சேவைச் சொத்துக்கள் விபரங்களை, அவற்றுக்கான பெறுமதிகளுடன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்கான படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 157-இ

'வாதுவ'வில் பொருள்கள் ஏற்றிய வர்த்தகர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இன்று பருத்தித்துறை வந்து சேரவிருக்கும் 'வாதுவ' கப்பலில் பொருட்களை ஏற்றிய தனியார் வர்த்தகர்கள், ப.நோ.கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் உரிய ஆவணங்களுடன் இன்று காலை 10-00 மணிக்கு புனர்வாழ்வுப் பகுதி அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலுக்குத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் சென்றமுறை 'வாதுவ' கப்பலில் பொருட்களைக் கொண்டு வந்த தனியார் வர்த்தகர்கள், ப.நோ.கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரும் சமுகமளிக்குமாறும் புனர்வாழ்வுப் பகுதி கேட்டுள்ளது. -இ

தென் பகுதிக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்திருப்பதாக அவர் வெரித்தாஸ் வானொலி சேவைக்கு தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டுக்களையும், ஆயுதங்களையும் தென்பகுதிக்கு கொண்டு சென்ற வாகனங்கள் அனைத்தினதும் இலக்கங்கள் தமக்குக் கிடைத்துள்ளதெனவும் திருமதி பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார். (இ)

ஐ.தே.க. ஆதரவாளர்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாளர்களை செயலிழக்கச் செய்வதே இந்த வேட மாற்றத்துக்கான காரணமாகும்.

அரசாங்கத்தை எதிர்வரும் தேர்தலில் தோல்வியடையச் செய்து இதுபோன்ற கபட நாடகங்களை பொதுமக்கள் அம்பலப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தான் திடமாக நம்புவதாகவும் திருமதி பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார். -இ

சந்திரிகாவை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற இடத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்த மாலை 7-30 மணிக்கும் 8-00 மணிக்கும் இடையில் திருமதி சந்திரிகா வருவதற்கு திட்டமிட்டிருந்தார்.

இந்த நேரத்தில் சம்பந்தப்பட்ட பொதுக்கூட்டம் நடைபெற்ற மேடைக்கு வழங்கப்பட்ட மின்விநியோகம் வெலிகத்தெ மின்நிலைய பொறுப்பதிகாரியின் உத்தரவின் பேரில் துண்டிக்கப்பட்டு அங்கு பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும் அகற்றப்பட்டனர் என்று திரு ராஜபக்ஷ தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக தமக்குக் கிடைத்த தகவல்களின்படி மேடைக்கு அருகாமையில் இருந்த மாடிக்கட்டிடம் ஒன்றில் அன்றிரவு துப்பாக்கி நபர் ஒருவர் இருந்துள்ளார்.

இதுபோன்ற ஒரு சம்பவத்தின்போது லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்டார்.

எனவே இதுகுறித்து உடனடி விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் திரு ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபரைக் கேட்டுள்ளார். -இ

சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து லிமிட்டெட் ஊழியர்களின் கடந்த ஜனவரி, பெப்ரவரி (1994) ஆகிய இரண்டு மாதச் சம்பளக் கொடுப்பனவுகள், நாளை புதன்கிழமை, நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணிவரை யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தக வங்கியில் வழங்கப்படுமென லங்கா சீமெந்து லிமிட்டெட் கணக்காளர் அறிவித்துள்ளார். -இ

றொக்கற்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவு முகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் ஏவிய பீரங்கிக் குண்டு ஒன்று இராணுவத்தினரின் காப்பரணில் வீழ்ந்து வெடித்தது. அப்போது மூன்று படையினர் கொல்லப்பட்டனர். இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

சுமார் 300க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் றொக்கற் மூலம் செலுத்தப்படும் எறிகுண்டுகள், பீரங்கிகள், சிறுசிறு ஆயுதங்கள் சகிதம் தாக்குதலில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்த்து, பத்தாவது சிங்கப் படைப்பிரிவு, நான்காவது விஜயபாகு காலாட்படைப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த துருப்புக்கள் தாக்குதல் நடத்தினர்.

இதேவேளையில் ஹெலிகொப்டர் பறந்த தாக்குதலில் ஈடுபட்டதாகவும், குண்டு வீச்சு விமானங்களும் தாக்குதலில் ஈடுபட்டதாகவும், மோதல் முடிவுற்ற பின்னர், இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் ஆங்காங்கு இரத்தக் கறைகள் காணப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். க-இ

தொலைக் கல்வி பயிற்சியாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தொலைக்கல்வி நிலையத்தில் பயிற்சிபெறும் 1991/93, 1992/94, 1993/95 பயிற்சியாளர்களையும், 1991/93 சகல போதனாசிரியர்களையும் எதிர்வரும் 26ம், 27ம் திகதிகளில் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி கே. துரைராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

பலாலியிலிருந்து
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிப் பறந்த ஷெல் தாக்குதலைப் படையினர் மேற்கொண்டனர்.

பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்த இந்த ஷெல்களினால் பொதுமக்கள் பதற்றமடைந்து தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. க-இ

இந்தியாவிலிருந்து
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய மேற்பார்வையின் கீழ் இவர்கள் வந்து சேர உள்ளனர்.

இத்தொகுதியில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 123 பேர் அன்றையதினம் இங்கு வந்து சேரவுள்ளனர்.

இவர்கள் நரேமா கப்பலில் வரவுள்ளதாகவும் பின்னர் அவர்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு செல்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (157 - இ)

தெற்கில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டின் பேரில் எதிரணியைச் சேர்ந்த தி.மு. ஜயரட்ன, டென்சில் எதிரிசூரிய ஆகிய இருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பிணையில் விடுக்க சட்டத்தரணிகள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாகாணசபை அமைச்சர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (வீ-இ)

திருமலையில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட 7 பிள்ளைகளின் தாயாரான பெண்டிற்க் இறியாவதி (வயது 38) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவரது கணவரும் படையினரால் ஏற்கனவே கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே தினம் சந்திரன் (29 வயது) என்பவரும் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. க-இ

கிராமங்களை முன்னேற்ற வழி செய்யவேண்டும்

- இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

முன்னேற்றம் இல்லாத கிராமங்களை முன்னேற்ற வழிசெய்ய வேண்டும். இந்த கிராமிய பாசறை நிகழ்வு தமிழீழ தேசியத் தலைவரின் ஆணையின் கீழ் நடைபெறுகின்றது. இக்கிராமத்தை முன்னேற்றுவதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கைதடி-நாவற்குழி கிராமிய பாசறை விழா கூட்டத்தில் நேற்று முன்தினம் பேசிய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கலைவாணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இளம்பரிதி தொடர்ந்து பேசுகையில்: இக்கிராமத்தில் கல்வி கற்க நிலையமுண்டு: பொழுது போக்கு மற்றும் வசதிகள் உண்டு. இதை நீங்கள் பயன் படுத்தி முன்னேற வேண்டும். இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய திரு கலைவாணன் பேசுகையில்:

இங்கு எமது துறைசார்ந்த அங்கத்தவர்கள் இக்கிராம வீடுகளுக்குச் சென்று எல்லாப்பிரச்சினைகளையும் அறிந்துள்ளார்கள். இவர்களுடன் ஒத்துழைத்து இக்கிராமத்தை முன்னேற்ற வழிசெய்யவேண்டும்.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இவ்விழாவில் அரசியல்துறை, மருத்துவத்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை, விளையாட்டுத் துறை சம்பந்தமான விடயங்கள் இடம் பெற்றன.

விளையாட்டுக்கழகங்களுக்கிடையே பல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றதுடன் இறுதி நாள் தாச்சிப் போட்டி, கைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போட்டிகளும் இடம் பெற்றன.

இக்கூட்டத்தையடுத்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (162-இ

காணி மாற்றங்கள் செய்தோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

காணி மாற்றங்கள் செய்து நீண்டகாலமாக உறுதிகளின் மூலப்பிரதிகளை பிரசித்த நொத்தாரிசுமார்களிடமிருந்து இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் அது பற்றிய விபரங்களை எழுத்து மூலம் யாழ்ப்பாணக் காணிப் பதிவாளருக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கும்படி கோரப்படுகின்றனர்.

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் காணிப் பதிவாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளதாவது:

யாழ். காணிப்பதிவகத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் தொடர்பில் உறுதிகளை எழுதும் பிரசித்த நொத்தாரிசுமார்களில் பலர் கடந்த பல வருடங்களாக உரிய முத்திரைகளை ஒட்டி இணைப்பிரதிகளை சமர்ப்பிக்காமல் இருக்கின்றனர்.

சில பிரசித்த நொத்தாரிசுமார் கடந்த காலங்களில் தாங்கள் எழுதிய உறுதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்காது யாழ்ப்பாணத்தைவிட்டுப் போய்விட்டனர். இதனால் உறுதிகளுக்கு உரியவர்கள் தங்கள் உறுதிகளை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது. மேலும் முத்திரைக் கட்டணங்களை உரிய திணைக்களங்களுக்கு மீளளிப்புச் செய்யமுடியாத நிலை காணிப்பதிவாளருக்கு ஏற்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளார்.

கிளாலி
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைத் தொடுத்தனர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது ஹெலிகொப்டர் பலாலியை நோக்கிச் சென்றது.

இதேவேளையில் நேற்று தென்மராட்சிப் பகுதியில் பொம்மர்களும், ஹெலிகளும் நோட்டமிட்டு பரவலாகப் பறந்தன. [170-இ

வடக்கு-கிழக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.தே. கட்சி ஸ்ரீ. ல. சு. கட்சி உட்பட ஏனைய அனைத்துக் கட்சிகளும் தமது அரசியல் அதிகாரத்துக்காக பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை [illegible] சிறுபான்மையினருக்கு வழங்க முயற்சிசெய்து வருகின்றன.

தாம் எக்கட்சியுடனும் பேசாது சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க போராடி வருவதாகவும் தெரிவித்துள்ளார். -க-இ

கெயர்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசப் பணிப்பாளர் திருமதி ஷெரீன் போணர் ஆகியோரே இன்று யாழ். நகர் விஜயம் செய்யவுள்ளனர்.

இப்பகுதியில் விவசாயபணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வழிவகைகளை ஆராயும் முகமாகவே இவர்கள் யாழ்; விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். (க - இ)

தேர்தலில் அரசு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்:

இத்தேர்தலின் முடிவுகள் மேற்படி இருகட்சிகளுக்கும் ஒருசேர தலையிடியாகவே அமைந்துவிட்டது. இருந்தாலும் இத்தேர்தலில் எதிர்க்கட்சியினருக்கே வெற்றி வாய்ப்பு இருப்பதாகத் தெரிகின்றது.

எதிர்க்கட்சியினரின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கே மக்கள் கூட்டம் நிறைந்து வழிகின்றது. ஆளும் ஐ.தே. கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பெருமளவில் மக்களைக் காணமுடியவில்லை.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தேர்தல் பிரச்சாரக்கூட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது கடும் போக்கை வலியுறுத்திப் பேசுகின்றார். இனியும் இந்த இனவாதப் பேச்சை மக்கள் செவிமடுப்பதாக இல்லை.

இத்தேர்தலில் அரசு தோல்வி அடைந்தால் வரும் காலத்தில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் ஜனாதிபதித் தேர்தல்களை, அரசு பின்போடலாம் அல்லது இத்தேர்தல்களை நடாத்துவது பற்றி மறுபரிசீலனை செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வீ-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B